அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 04/2017(II)

எனது இலக்கம் : EST-7/04/ALW/2060(v)
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2025.06.04

அமைச்சுக்களின் செயலாளர்கள்

மாகாண பிரதமச் செயலாளர்கள்

திணைக்களத் தலைவர்கள்

**<u>பயிலுநர்களை செயன்முறைப் பயிற்சிக்காக அரசாங்க தாபனங்களுக்கு இணைப்புச் செய்தல்</u>**

மேற்படி விடயம் தொடர்பில் வெளியிடப்பட்ட 2017.02.28 ஆம் தினத்தன்றான அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 04/2017 மற்றும் 2017.08.10 ஆம் தினத்தன்றான அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 04/2017(I) தொடர்பில் உங்களின் அவதானத்தை செலுத்துகின்றேன்.

02. 2017.02.28 ஆம் தினத்தன்றான அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 04/2017 இன் பிரிவு 7 இன் ஏற்பாடுகளின்படி பயிலுநர்களுக்கு நாளாந்தம் செலுத்தப்படும் கொடுப்பனவு, 2025.06.01 ஆம் தினத்திலிருந்து செயற்படும் வகையில் ரூ.1000/- ஆக திருத்தப்பட்டுள்ளதுடன், அவ் சுற்றறிக்கை மற்றும் 2017.08.10 ஆம் தினத்தன்றான அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 04/2017(I) உட்பட ஏனைய ஏற்பாடுகள் மாறாது காணப்படும்.

03. மேலும், மேற்படி கொடுப்பனவினை செலுத்துதல் வருடாந்த வரவு செலவுத்திட்டத்தினால் ஒதுக்கப்பட்ட மானியங்களின் மீது முகாமைத்துவம் செய்யப்பட வேண்டியதுடன், அதற்காக திறைசேரியிடம் மேலதிக மானியங்களை கோரக்கூடாது.

04. இச் சுற்றறிக்கை பொதுத் திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் வெளியிடப்பட்டுள்ளது.

ஒப்பம்./எஸ்.ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாக, மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு


தொலைபேசி : 011-2697233
தொலைநகல் : 011-2692158
மின்னஞ்சல் : ade-vii@pubad.gov.lk